**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE (FTC), ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 13/2023 D.W. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜாகனா அரிவிந்த் (The Assistant Manager, Union Bank of India, Washermanpet Branch, Chennai)** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஜகனா லட்சுமண ராவ் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.02.2025**

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் Union Bank of India, Washermanpet Branch, Chennai வங்கியில் Assistant Manager ஆக பணிபுரிந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரான ஆன்றணி மேரியின் கணக்கு எண் 465002010011129. தங்கள் வங்கியில் அவர் கணக்கு துவங்கும்போது சமர்ப்பித்த Application form to open the Account மற்றும் அவரிடம் வங்கியிலிருந்து வாங்கிய மாதிரி கையொப்ப பதிவேடு ஆகியவற்றை உண்மை நகலாக சான்றிட்டு கொண்டு வந்து சாட்சியம் அளிக்க எனது வங்கியின் மேலாளருக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்துள்ளது. அவர் கொடுத்த அதிகார அறிவிப்பின் கீழ் நான் மேற்படி ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். **அந்த அதிகார அறிவிப்பு Ex.D14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. திருமதி. ஆண்றணி மேரி அவர்களின் **Account open Application Form–ன் நகல் Ex.D15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் Ex.D15ல் உள்ள கையொப்பங்கள் ஆண்றணி மேரி உடையது தான். அந்த கையொப்பங்கள் எங்கள் வங்கி ஊழியர்கள் முன்னிலையில் தான் வாங்கப்படும்.

**குறுக்கு விசாரணை**

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர் சென்னை விலாசத்தை வைத்து தான் Account Open செய்தார் என்றால், சரிதான். இந்த வழக்கு காசோலை தொலைந்து போனது என்று Stop Payment செய்தார்களா என்றால், இல்லை.

2. பொதுவாக காசோலையில் உள்ள கையொப்பத்தில் மாறுபாடு இருந்தால், அது மாறுபாடு என்று மட்டும் தான் கொடுக்கப்படும். ஆனால், தவறான கையொப்பம் என்று கொடுக்கப்படாது என்றால் சரிதான். பொதுவாக எங்களது வங்கிக்கு வரும் காசோலைகளில் உள்ள கையொப்பம் யார் போட்டுத் தருவார்கள் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. எங்களிடம் வரும் காசோலைகளில் உள்ள கையொப்பத்தை நாங்கள் ஒப்பீடு செய்வோம்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.